31st August 1961]

Sri A. GOVINDASAMI : நான் விசேஷ சலுகை கொடுக்கப்படுகிறதா என்று கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் உபகாரச் சம்பளம் கொடுப்பதே விசேஷ சலுகைதான் என்றார்கள் . . . .

DEPUTY SPEAKER : We are now in question No. 1558. The hon. Member's supplementary relates to the previous question.

Flood Relief Fund (November 1960 flood).

*1559 *Q.*—Sri S. M. ANNAMALAI. கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பெய்த மழையில் சேதத்திற்காக நிவாரண நிதியாக இந்தியாவின் முதல் அமைச்சர் பணம் அனுப்பினாரா?

(இ) அப்படியாயின், எவ்வளவு பணம், யார்மூலம் விநியோகிக்கப் பட்டது.

The Hon. Sri M. A. MANICKAVELU : (அ) Yes. Donations totalling Rs. 25,000 were received from the Prime Minister's National Relief Fund.

(இ) The donations were pooled with the Madras Cyclone Relief Fund, 1955, from which a total sum of Rs. 80,935.87 was utilised through the Inspector-General of Police, Board of Revenue, Collector of Madras, and the Corporation of Madras.

Sri S. M. ANNAMALAI : மேயர் தலைமையில் நியமிக்கப்பட்ட கமிட்டி அந்தப் பணத்தைத் தரவேண்டும். நாங்களே வழங்குகிறோம் என்று கேட்டார்களா ? ஏன் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது ?

The Hon. Sri M. A. MANICKAVELU : சாதாரணமாக இந்த மாதிரி உதவியை சர்க்கார் மூலமாகத்தான் செய்கிறோம். அதிகப் பணம் சர்க்கார் தரப்பிலிருந்துதான் போகிறது. ஆகையால் ஏற்கெனவே செய்கிற ஏஜென்சிமூலமாகத்தான் இதையும் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது.

Homoeopathic College (Financial Aid for Buildings)

* 1560 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state, whether there is any proposal to give financial aid for the construction of buildings for a Homoeopathic College in the City of Madras?

The Hon. Sri M. A. MANICKAVELU : No, Sir.

Hajee Karutha Rowther College

*1561 *Q.*—Sri N. M. VELAPPAN (on behalf of Sri N. R. THIAGARAJAN) : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரிக்கு 1959–60-ல் சர்க்கார் செய்த உதவி என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : A sum of Rs. 32,421 was sanctioned to the Hajee Karutha Rowther Howdia College, Uthamapalayam, during 1959-60 as teaching grant for the year 1958-59. No other grants were paid to the college that year.